செய்தி வெளியீட்டு எண்.585 நாள்:13.07.2010

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>பதிவுத்துறையில் கருணை அடிப்படையில் 33 நபர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.</u>

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பதிவுத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

2009–10ம் ஆண்டுக்கு கருணை அடிப்படை பணிநியமனத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட பணிக்காலியிடங்களிலும், 2010–11ம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிக் காலியிடங்களிலும் இன்று (13.07.2010) 33 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டது.

பதிவுத் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவதற்கு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஏற்கனவே 06.03.2007ஆம் நாளில் 48 நபர்களுக்கும், 20.08.2009ல் 54 நபர்களுக்கும் ஆக மொத்தம் 102 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இத்துறையில் கருணை அடிப்படையில் இன்று வழங்கப்பட்ட 33 பணிநியமன ஆணைகளையும் சேர்த்து இதுவரை 135 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, கலைஞர் தலைமையிலான தமிழக அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ் ராஜன், வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திரு. முகமது நசிமுதீன், இ.ஆ.ப., மற்றும் பதிவுத்துறைத் தலைவர் திரு. ரா. சிவகுமார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.